கேள்வி. வரி விதிக்கலாமா கூடாதா என்பது வேறு. நிதி மசோதாக்கள் வரும்போது பேசவேண்டிய விவரங்கள் அவை. இப்பொழுது திருமதி அனந்த நாயகி அம்மையாரும், திரு. ஹாண்டே அவர்களும் சொன்னார்கள். துணை மானியக் கோரிக்கைகள் வரும்போது, வரவு செலவு விவரம் பற்றிச் சொல்லலாம் என்று. இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் செய்திருப்பது ஒரு அறிவிப்புதான்; அரசாங்கத்தின் நிலையை கொஞ்சம் முன்னோடியாக இந்த அவைக்கும், நாட்டிற்கும் ஆயத்தம் செய்யும் வகையில் தெரிவிக்கப் பட்ட அறிவிப்புதான். இப்படி எல்லா விவரங்கள் பற்றி 82-வது விதியின் கீழ் அறிக்கை கொடுக்கலாம். A statement can be made by a Minister no a matter of public importance என்று அந்த விதியில் இருக்கிறது. சாதாரணமாக பப்ளிக் இம்பார்டன்சுக்கே ஸ்டேட்மென்ட் செய்யலாம் என்றால், மிக மிக முக்கியமான ஒரு விசேஷ பப்ளிக் இம்பார்ட்டென்ஸ் இருக்கும்போது, இந்த விதியின் கீழ் ஸ்டேட்மென்ட் செய்யக் கூடாது என்கிற விதிவிலக்குக் கிடையாது.

திரு. ஹாண்டே அவர்கள் சொன்ன 205-வது பிரிவின்படிச் சொன்னாலும், இது அறிவிப்புதான். பில்கள் வரும்போது, ஏராளமாக வாய்ப்புக்கள் நமக்கு இருக்கும். இப்பொழுது அவைமுன் இருப்பது, 82-வது விதியின் கீழ் முதல் அமைச்சர் அறிவிப்புக் கொடுக்க உரிமை இருக்கிறதா என்றால், தாராள மாக அந்த உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட விசேஷ காலத்தை முன்னிட்டு, நெருக்கடியை முன்னிட்டு, முன்கூட்டியே ஆயத்தம் செய்ய வேண்டும் என்று, சபையின் நம்பிக்கையைப் பெற, அவர்கள் இந்த அறிக்கையை அளித்திருக் கிறார்கள். இதன் விவரங்கள்பற்றி மசோதாக்கள் மன்றத்தின் முன்னாலே வரும். ஆகவே, இதில் எந்த விதமான ஒழுங்கீனமும் இல்லை என்று தீர்ப்பளிக் கிறேன்.

(4) கவன ஈர்ப்பு

(அ) திருப்பூரிலுள்ள சலவைத் தொழிற்சாலைத்தொழிலாளரின் வேலை நிறுத்தம்.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike of the workers in many bleaching factories at Tiruppur in Coimbatore district in October 1971.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டப் பொதுத் தொழிலாளர் சங்கம், திருப்பூரில் உள்ள பாரதி சலவைத் தொழிற்சாலை ஏனைய 57 சலவை செய்தல்/சாயமேற்றல் தொழிற்சாலைகளில் நிர்வாகத்தினரிடமிருந்து, 1970-71-ஆம் ஆண்டுக்குரிய தொழிலாளர் ஊதியங் களில் 20 சதவீதம் பூரிப்பூதியம் கோரி, கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரி முன்பு தகராறு ஒன்றை எழுப்பி உள்ளது. தொழிலாளர் நல அதிகாரி இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டுள்ளார். சங்கம் ரூ. 150 கோரியது. நிர்வாகம் ரூ. 75 அளிக்க முன்வந்தது. தொழிலாளர் நல அதிகாரி ரூ. 95 கொடுக்கலாம் என்று கருத்துரை அளித்திருக்கிறார்.

(ஆ) மதுரை மகாலட்சுமி ஆலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தம்